# அன்னை கிருஷ்ணாபாய் கல்வி நிலையம்
(மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கான பாடசாலை)

# MATHAJI KRISHNABHAI INSTITUTE
(School for Mentally Retarded Children)

EDS

Founded in 2001

Education Development Society
15/1, Kovil Road,
Kallady Uppodai, Batticaloa.
Regd . No. MN / DS / SS / 10
☎ 065 - 23181

---

மனவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கான பாடசாலை

பல்வேறு காரணிகளால் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பலர் எங்களிடையே உள்ளனர். இவர்களால் எவ்வித பயனும் இல்லை என்று இத்தகையவர்கள் சமூகத்தில் இருந்து மறைத்து வைக்கப்பட்டு உள்ளனர். மனவளர்ச்சியில் தாமதமும் அறிவு வளர்ச்சியில் பின்னடைவும் கொண்டவர்கள் என சமூகத்தால் ஒதுக்கப்பட்ட 12 வயதுக்கு குறைவான பல பிள்ளைகளை அரவணைத்து அவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றை வழங்கும் முகமாக பங்குனி 2001ஆம் ஆண்டு முதல் சிறப்பு பாடசாலை ஒன்றை இராமகிருஸ்ண மிஸன் சுவாமி ஆத்மகனானந்தஜீ மகராஜ் அவர்களின் வழிகாட்டலில் ஆரம்பித்து நடாத்தி வருகின்றோம். இதற்கு மதிப்பிற்குரிய வ.பொ.பரமலிங்கம் அவர்கள் ஓர்தாந்த ஆசிரியர் கொடுப்பனவுக்கு அனுசரனை புரிந்து வருகின்றார்.

இந்த மாணவர்கள் மகிழ்ச்சியாக இருக்கத்தக்க வகையில் விளையாட்டுப் பயிற்சி, வெளிட கற்றுப்பயணம், எழுத்துப் பயிற்சி, வாசிப்பு, தமது வேலைகளைத் தாமே பூர்த்தி செய்யும் தகைமையைப் பெறல், நிறங்களை அடையாளம் காணல், கலை நிகழ்வுகளில் பங்குகொள்ளல் என பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

08 தொடக்கம் 20 வயதுக்கு உட்பட்ட 20 மாணவர்கள் தற்போது எமது நாள் பாடசாலையில் கல்வி பயில்கின்றனர். இவர்களுக்கான பயிற்சியினை இரு பயிற்றப்பட்ட ஆசிரியைகள் கற்பிப்பதோடு இவர்களுக்கு உதவியாக ஒருவரும் கடமையாற்றுகின்றனர். போதனா வைத்தியசாலையின் மனநல மருத்துவர் இம் மாணவர்களுக்கு சிகிச்சையும் மருத்துவ உதவியும், மனநல பயிற்சியும் நல்கி வருகின்றார்.

இந்த பாடசாலையை நடாத்துவது தொடர்பாக எமக்கு பல்வேறு தேவைகள் உள்ள போதிலும் தற்போது இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் உதவியாளருக்குமான கொடுப்பனவும், மாணவர்களுக்கான தேனீர், சிற்றுண்டியும் மாத்திரமே வழங்கப்படுகின்றது.